



# தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு - 2025

## மின்னணு யுகத்தில் முன்னேறும் தமிழ்நாடு!

## திராவிட மாடல் அரசு

104

**நீரை.மகேந்திரன்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்தபோதே தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை **‘ஒரு டிரில்லியன் டாலர்’** என்கிற அளவுக்கு உயர்த்த வேண்டும் என இலக்கினை அறிவித்தார் நம் முதலமைச்சர். அந்த இலக்கை நோக்கி, அரசின் பல துறைகளும் பெரும் பாய்ச்சல் நிகழ்த்திக் கொண்டிருக்கும் நிலையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு சேவைகள் துறையும், ஒவ்வொரு ஆண்டும் தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டினை சென்னையில் நடத்தி, உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களை, சென்னையை நோக்கி ஈர்க்கும் பணியினைச் செய்து வருகிறது.

2021- 22ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் அறிவிப்புக்குப் பின்னர், கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னையில் நடைபெற்றதைப் போல ‘தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு’ (Umagine) இந்த ஆண்டும் சென்னையில் நடைபெற்று, பல உலக நிறுவனங்களின் ஒப்பந்தங்கள், முதலீடுகளை ஈர்த்துள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு சேவைகள் துறையின் எல்காட் (ElCOT) நிறுவனம் மூலம் கடந்த 09.01.2025 மற்றும் 10.01.2025 ஆகிய இரண்டு நாட்களில் சென்னை வர்த்தக மையத்தில், நடைபெற்ற இந்த மாநாட்டினை நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புறையாற்றினார். தகவல் தொழில்நுட்பங்களில் நாம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பறைசாற்றும் 50 ஆயிரம் சதுர அடி பரப்பளவிலான தொழில்நுட்பக் கண்காட்சியையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

### அரங்குகள் - உரைகள்

இந்த மாநாட்டில், பல தலைப்புகளில் நடைபெற்ற கலந்துரையாடல்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு சேவைகள் செல்ல வேண்டிய பாதையைச் சொல்வதாக அமைந்தன. குறிப்பாக, 100-க்கும் மேற்பட்ட சர்வதேசத் தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினர்.

சமமான பொதுக் கொள்கைகள் (Equitable Public Policy And Governance), காலநிலைத் தாக்கம் மற்றும் நிலைத்தன்மை (Climate Impact And Sustainability), பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழிலாளர் மாற்றம் (Economic Growth And Workforce Transformation) போன்ற முக்கிய தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றன.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்பம் (Deep Tech), காலநிலை மாற்றம் (Climate Change), குவாண்டம் தொழில்நுட்பம் (Quantum Computing) புத்தாக்கத் தொழிற்சூழல் (Startup Eco System), அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், மின்னணு விளையாட்டுகள் மற்றும் படக் கதை (Comics). உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centre), திறன் மேம்பாடு (Talent Development) மற்றும் மின் வாகனம் (Electric Vehicle) போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் குறித்து, மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற விவாதங்கள், உரையாடல்கள் எதிர்கால இலக்குகளை அமைத்துக்கொள்ளும் வகையில் இருந்தன.

10-ஆம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவில், துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாகக் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றியதுடன், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (i-TNT) அறக்கட்டளை நிதித் திட்டத்தினையும் தொடங்கி வைக்கப்பட்டது.

**உலகளாவிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் தொழில்நுட்பச் சூழலை மேம்படுத்தவும் இந்த மாநாடு, களம் அமைத்துக் கொடுத்துள்ளது.**

### வாய்ப்புகள் - ஒப்பந்தங்கள்

தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் JIGSAW புத்தாக்க இணையதளத்தில் 35 கல்லூரிகள் பதிவேற்றம் செய்துகொண்டன. இதன் மூலம் அந்தக் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்பப் புத்தாக்கச் சூழல் மற்றும் புத்தாக்கத் தொழில்களுக்கான முதலீட்டு வாய்ப்புகள் ஏற்படவுள்ளன.

ஆழ்நிலைத் தொழில்நுட்பத்தில், தொடக்க நிறுவனங்களின் காப்பகங்களுடன் (DeepTech focused incubators) ஒப்பந்தங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டன. இதன்மூலம், தொடக்கநிலைத் தொழில்நுட்ப முயற்சிகளை வளர்த்தெடுக்கும் சூழலும் உருவாகியுள்ளது.

தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் ஐ.சி.டி. (ICT) அகாடமி நிறுவன ஆய்விதழின் சிறப்புப் பதிப்பும் வெளியிடப்பட்டது.

இந்த ஐ.சி.டி. நிறுவனம், A- 2000, ஹெச்.சி.எல்.டெக்னாலஜிஸ், பகவான் சைபர் டெக், இன்டெலக்ட் டிசைன் (Intellect Design Arena) சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உள்ளிட்ட நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் மின்னணு வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் துறைக்கான சீர்மிகு மையத்தை (CoE for Electronic System Design and Manufacturing) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது.

கலை மற்றும் அறிவியல் துறை மாணவர்களுக்கான செயல் வழித்திட்டக் கற்றல் (Project based learning) இணையதளத்தையும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்னணு சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த இரண்டு நாள் உச்சி மாநாட்டின் மூலம், தமிழ்நாட்டுத் தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்களுக்கும், தொழில்முனைவோருக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. அதன் மூலம் உலக அளவில் முதலீடுகளைத் திரட்டுவதற்கு இந்த மாநாடு அவர்களைத் தயார்படுத்தியுள்ளது.

இவை தவிர, கேரளா ஸ்டார்ட்-அப் மிஷன், மேக்கர்ஸ் வில்லேஜ், நாஸ்காம் ஃபவுண்டேஷன், கேம் டெவலப்பர் கூட்டமைப்பு, விஎஃப்எக்ஸ் மற்றும் அனிமேஷன் சங்கம், ஏ.சி.இ. சிங்கப்பூர் ஆகிய மிக முக்கிய உலகளாவிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் தொழில்நுட்பச் சூழலை மேம்படுத்தவும் இந்த மாநாடு, களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

**...சாதனை தொடரும்**

- 35 முதலீட்டு நிறுவனங்கள், 65 புத்தாக்கத் தொழில்முனைவோருடன் ஒப்பந்தங்கள்.
- 25 புத்தாக்க நிறுவனங்கள் ஒப்பந்தங்களுக்கு தயார் நிலையில் உள்ளன.
- 10 தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அவற்றில் 2 ஆழ்நிலைத் தொழில்நுட்ப வன்பொருட்கள், 7 செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள்.
- 57 புத்தாக்க நிறுவனங்கள், முதலீட்டாளர்களுடன் இணைந்து, அடுத்த கட்டப் பணிக்கு ஆயத்தம்.

**களம்**

- கருத்தரங்குகள்-28
- புத்தாக்க அரங்குகள்-12
- மாணவர்களுக்கான அரங்குகள்-7



**கலந்து கொண்டவர்கள்**

முதல் நாள் 9 மாநிலங்கள் - 3,000 மாணவர்கள் - 50 கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு.

இரண்டாம் நாள் 8 மாநிலங்கள் - 3,500 மாணவர்கள் - 45 கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு.

## திசையெங்கும் செல்லும் ‘திராவிட வரலாறு’!

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா மூன்றாவது ஆண்டாக, சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், ஜனவரி 16-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தப் புத்தகத் திருவிழாவுக்கு உலகின் பல நாடுகளில் இருந்தும் பதிப்பாளர்கள், இலக்கிய முகவர்கள் வருகை தந்து தமிழ் நூல்களை, உலக மொழிகளுக்குக் கொண்டு செல்ல ஒப்பந்தங்கள் செய்தனர். அதுபோல, உலக மொழிகளின் முக்கியமான படைப்புகளையும் தமிழுக்கு மொழிபெயர்ப்பதற்கும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மொழிமாற்றப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசும் நிதி நல்கைகளை அளித்து வருகிறது. அரசின் இந்த முன்னெடுப்பு, எழுத்தாளர்கள், பதிப்பாளர்களிடையே வரவேற்பைப் பெற்று வருகிறது.

மூன்றாவது ஆண்டாக நடைபெற்ற பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில், கழக இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகமும் தமது நூல்களுடன் பங்கேற்றிருந்தது. நமது நூல்களில், ‘திராவிடத்தால் வாழ்கிறோம்’, ‘திராவிடப் போராளிகள்’ மற்றும் ‘திராவிட மாடல் அரசு’ ஆகிய நூல்கள் அரபு மற்றும் கொரிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

நூற்றாண்டைக் கடந்த, திராவிட இயக்கத்தின் வரலாற்றை, குழந்தைகளுக்கும் கொண்டு சேர்க்கும் வடிவில் அமைந்துள்ள ‘திராவிடத்தால் வாழ்கிறோம்’ ஓவிய வடிவிலான வரலாறு, கோவி.லெனின் அவர்களின் சிறப்பான எழுத்தாக்கத்தாலும் ஓவியர் சொக்கலிங்கத்தின் உயிரூட்டும் ஓவியங்களாலும் ஆனது. தந்தை பெரியார் காலம் முதல் திராவிட இயக்கத்தில் இணைந்து செயல்பட்ட முக்கியமான பெண் ஆளுமைகளைப் பற்றி வழக்கறிஞர் அருள்மொழி எழுதியுள்ள முக்கியமான நூல் ‘திராவிடப் போராளிகள்’.

நம் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைக்கும் ‘திராவிட மாடல் அரசு’ ந.வினோத்குமார் அவர்களின் எழுத்தாக்கத்தால் உருவானது.

இந்த மூன்று புத்தகங்களும் மொழிபெயர்க்கப்படுவதன் மூலம் திராவிட இயக்கத்தின் பெருமை, திசைகள் எங்கும் பரவுகிறது.

## :ப்ளாஷ்பேக்



### பேராசிரியர் கரங்களால் விருது!



எஸ்.அருள்ஜோதி

2011-ஆம் ஆண்டு சென்னை, மயிலாப்பூரில் இலக்கிய விழா ஒன்றில் பங்கேற்க அன்றைய கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் வருகை தந்திருந்தார். அந்த நிகழ்வில், தமிழாசிரியராகப் பணியாற்றிய எனக்குப் பாராட்டும், விருதும் பேராசிரியர் அவர்களின் கரங்களால் வழங்கப்பட்டு, பெருமைப்படுத்தப்பட்டேன். அப்போது, பேராசிரியர் அவர்களுடன் எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படத்தை, நான் இன்றளவும் மாணிக்கமாகப் போற்றி பாதுகாத்து வருகிறேன்.

**- எஸ்.அருள்ஜோதி, ஓய்வுபெற்ற தமிழாசிரியர், கடலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### முதல் கூட்ட நிதி!

1949-இல் தி.மு.கழகம் உருவான பின்னர், செப்டம்பர் 18-ஆம் தேதி சென்னை, ராபின்சன் பூங்காவில் முதல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு பேரறிஞர் அண்ணா ஆயிரம் ரூபாயும், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ப.உ.சண்முகம், கே.கே.நீலமேகம், எஸ்.நீதிமாணிக்கம் ஆகியோர் தலா ரூ.100 ரூபாயும், ஆவுடையப்பன் 51 ரூபாயும் நன்கொடையாக வழங்கினர். அன்றைக்கு தங்கத்தின் விலையே கிராம் 9 ரூபாய்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

724

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131